ஓம் ஸ்ரீ அகத்தீசர் துணை

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!

**சற்குருநாதா! சண்முகநாதா! அருட்பெருஞ்ஜோதி! அகத்தீசாய நம**

**சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரப்பிரம்மனே நம**

# துன்பங்கள் தீர ஓங்காரக்குடிலுக்கு வாருங்கள்!


பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

நிறுவனர்,

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**

**ஓங்காரக்குடில், துறையூர் – 621 010. ✆ 04327–255684.**

**Homepage. www.agathiar.org**



நன்கொடை : ரூ 5.


ஓம் ஸ்ரீ அகத்தியர் துணை

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!
சத்தியமே அகத்தியம்! அகத்தியமே ஜெயம்!!

05–02–2003, புதன்கிழமை அன்று, திருச்சி, சங்கிலியாண்டபுரத்தில் உள்ள ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிடர் திரு. V.T. பரணீதரன் அவர்கள் மூலமாக **ஓங்காரக்குலாசான்,** தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களின்** தவச்சிறப்புகளைப் பற்றியும், அன்பர்கள் நடந்துகொள்ளக்கூடிய முறைகளைப்பற்றியும், **மகான் கொங்கணேஸ்வரர் அவர்கள் தம் சுவடிமூலம் அருளிய அருள் வாக்கு.**

இந்தநூல் தெய்வீகமானது. இதை பயபக்தியுடன் படிப்பது நல்லது.

# மகான் கொங்கணேஸ்வரர் ஆசி காண்டம்

வாசியின் சூட்சுமமே அரங்கா போற்றி
வாசி வயமானதொரு அரசா போற்றி
வாசியை உயர்த்திவரும் தேசிகா போற்றி
வாசியே உன்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே நித்திய ஆசி தன்னில்
புகலவந்தேன் கொங்கணர் யான் இன்று நாளே
பார்த்துரைக்க சித்ரபானு ஆண்டு கலையின் திங்கள் (தை மாதம்)
பாடவந்தேன் சித்திபெற விளக்கம் தன்னை 02.

தன்னிலே குரு அகத்தியர் உரைத்தது போல்
தரணியிலே இடையிடையே சித்தர்கள் ஆசி
நன்மைதர வழங்கிடுவார் என்று சொல்வேன்
நானிலத்தில் அருள் பெற்றாய் அரங்கா நீயே 03.

அரங்காநீ பெற்றதை எல்லாம் செலவழித்தாய்
அன்னதனால் சித்திகளும் காலம் மேவி
அரங்கா உன் நிலைமாறச் செய்யுதையா
அவனியிலே திருமலையில்(திருப்பதியில்) அமர்ந்து யானே 04.

(அன்பர்கள் குடிலாசானின் அருகில் வந்து ஆசிபெறுவதால் ஆசான் தவவலிமை குறைந்துவிட்டது. இனி தவத்தில் உயரவேண்டும் என்றால் அன்பர்கள் ஏழு அடி தள்ளி நின்றே வணங்க வேண்டும். அப்படிச்செய்தால் ஆசான் தவமும் உயர்வடையும், அன்பர்களுக்கும் பல நன்மைகள் உண்டாகும்).

அமர்ந்துயான் அருளியதுபோல் ஓங்காரக்குடிலில்
அரங்கர் உன்னுள் அமர்ந்துமே இன்று முதலாய்
நேமமுடன் அருள் செய்வேன் அன்பர்களுக்கு
நிலமதனில் அன்பர்களின் குறையை போக்கி 05.

(ஏழு அடி தள்ளி நின்று வணங்குகின்றவர்களுக்கு மகான் கொங்கணேஸ்வரர் ஓங்காரக்குலாசானுள் இருந்து எல்லா

குறைகளையும் தீர்த்து அருள் செய்வதாக அருளியுள்ளார்கள்.)

போக்கியே பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து
பூவுலகில் உயரவைப்பேன் ஆசியுண்டு
ஊக்கம் தரும் சற்குரு அரங்கா நீயே
**உலகத்தில் சனி கிரக தோஷத்தையும்** 06.

(மேலும், ஏழரைச்சனி, அஷ்டமச்சனி உள்ளவர்களுக்கு, அவர்கள் தோஷங்களை நீக்கி அருள் செய்வதாக மகான் கொங்கணேஸ்வரர் அருள் வாக்கு தந்துள்ளார்கள்.)

**தோஷத்தையும் அகற்றவல்ல பெருமாளும் நீயே**
**தெரிவிப்பேன் முன்பொருநாள் சுவடி தன்னில்**
**ஆசிபெற ஏழுஅடி தள்ளி நின்று**
**ஆசிபெற வேண்டுமென்று உரைத்தார் கும்பன்**(அகத்தியர்)07.

கும்பனவர் உரைத்தபொருள் இதுதானப்பா
குவலயத்தில் ஏழுஅடி ஏழு மலையைத்தான்
இம்மையுடன் குறிப்பாக சூட்சுமம் தந்தார்
இதற்குவிதி பன்னிரு கட்டளைகள் உண்டு 08.

(ஏழு அடி தள்ளிநின்று வணங்கவேண்டும் என்பதற்கு சூட்சுமம், ஏழு திரைகளை நீக்கி, பரம்பொருளை தரிசிக்க அருள் செய்வதாக மகான் கொங்கண மகரிஷி அருளியுள்ளார்.)

உண்டான இதன் முறையே செயல்பட்டால்தான்
உன்சித்தி சடுதியில் ஆகுமப்பா
கொண்டுரைக்க தவம் இனி உயர்வதாலே
கொங்கணரும் உரைத்தபடி செயல்படுவாயே 09.

(ஏழு அடி தள்ளிநின்று வணங்கினால்தான், ஏழு திரைகளும் அகன்று ஆன்மஜோதியை தரிசிக்க முடியும் என்று மகான் கொங்கண மகரிஷி அருளியுள்ளார்கள்.)

செயல்பட்டால் மக்களுக்கும் வினைகள் நீங்கும்

சிறப்பான அறம் உயரும் நலன்கள் பெருகும்
நேயமுடன் பிரம்மரிஷி ஆவாய் நீயே
நிலமதனில் கட்டளையின் விபரம் கேளும் 10.

கேளுமே ஆசான் உன் தபோபலன் உயர
கேட்டிடுவாய் இனியாவரும் ஏழுஅடி தள்ளி
காலமதில் ஆசான் உமை வணங்குதல் வேண்டும்
கண்டுரைக்க நேரடி தரிசனம் காண 11.

காணவே சிறப்புக் கட்டணம் அஷ்டோத்தர தனம் (ரூ. 108)
காண்பவர்கள் செலுத்திட வேண்டுமப்பா
**பேணவே பொதுதரிசனம் குருநாளில்தான்**
பேசிடுவேன் உதயகாலம் இரண்டரை நாழிகை 12.

நாழிகையும் மாலை நேரமும் பொதுதரிசனம்
நாளன்று வழங்கலாகும் ஆசியுண்டு
**தெளிவுபெற குறைகள் கூற பதினொரு ரூபாய் தட்சணை**
**தானதற்கு உரியதாள்** (வெள்ளை பேப்பர்) **குடிலில் வழங்கி 13.**

வழங்கியே எழுதியபின் பேழையுள் போட்டு
வருமுலகில் மாதவனும் அதை படிக்க ஆசான்கேட்டு
கலக்கங்கள் குறைகள் விலக ஆசான் ஆசி
கண்டுரைப்பேன் தனித்தனியே அளித்திடல் வேண்டும் 14.

வேண்டியே கொங்கணரும் உன்னுள் இருந்து
வரும் குறைகளை நிவர்த்திப்பேன் ஆசியுண்டு
கொண்டுரைப்பேன் குறைகள் நீங்க மக்கள் யாவும்
குவலயத்தில் சனி, ராகு, குசன்(செவ்வாய்) தோசம் உள்ளவரும் 15.

(சனி தோஷம், ராகு தோஷம், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் ஓங்காரக்குடிலுக்கு வந்தால், மகான் கொங்கணேஸ்வரர் அவர்கள் மேற்கண்ட தோஷங்களை நீக்கி அருள் செய்வார்கள்.)

உள்ளவர்களும் குறைகள்தனை எழுதிப்போட்டு
**உலகத்தில் பதினொரு வாரம் தொடர்ந்து குடிலும்**

**நல்விதமாய் வந்துமே ஜோதி முன் வணங்கி**
**நல்அன்ன பிரசாதத்தை உண்டு மகிழ** 16.

மகிழவே ஞானிகளின் ஆசிகிட்டி
மார்க்கமிலா பிரச்சனைகள் அகன்று மேவும்
அகிலமதில் மற்றுமொரு உபாயமும் உண்டு
**அகவல் பாராயணத்தில் பதினொருநாள் கலந்து ஆசி** 17.

ஆசியே இடைவிடாது பெறுதல் வேண்டும்
அவரவர்கள் பிரச்சனையும் அகலும் பாரே
ஆசிபெற குடில் அணுகும் நாட்களெல்லாம்
அறிவித்தபடி தட்சணை செலுத்தி தூயதாளில் 18.

தாளதனில் குறைகள் எழுதி பேழையுள் போட்டு
தானதற்கு ஆசிபெற குறைகள் நீங்கும்
காலமதில் கொங்கணரும் அளித்தேன் ஆசி
கண்டுரைப்பேன் ஆசான் உம்மிடம் நேரடியாக 19.

நேரடியாய் குறைகூற உள்ளவர்கள் தான்
நிலமதனில் சகஸ்திரம் (ரூ. 1008) தட்சணை செலுத்தி
நேரடியாய் மலர்தூவி பாதபூஜை போல்
நிலமதனில் தள்ளிநின்று செய்து ஆசி 20.

ஆசிபெற குறைகள் விலகும் சடுதியாக
அரங்கா உன்னுள் கொங்கணரும் அமர்ந்து கேட்டு
ஆசிதனை அளித்திடுவேன் குறைகள் விலகி
அவரவரும் சடுதியில் நலனை காண்பார் 21.

காண்பார்கள் அறப்பணிக்கு தன உதவி
கண்டுரைக்க அன்னவர்கள் செய்வதாலே
நன்மைகளும் பெருகிடுமே ஆசியுண்டு
நிலமதனில் திருமலையில்(திருப்பதியில்) இறைவனுக்கு 22.

**இறைவனுக்கு திருக்கல்யாணம் செய்வதுபோல்**
**ஏழைகளின் திருமணத்திற்கு நிதி உதவி**
**நிறைவுபெற பெற்றுமே சன்மார்க்க முறைப்படி**
**நிலமதனில் மன்றலதும்** (திருமணம்) **செய்யலாகும்** 23.

(திருமணம் தடை உள்ளவர்கள் ரூ. 2,000 காணிக்கை செலுத்தினால், திருமணத்தடை நீங்கி திருமணம் நல்லபடி நடக்கும். அந்த ரூ. 2,000த்தை ஏழை எளிய மக்களுக்கு சன்மார்க்க முறைப்படி இலவசத் திருமணம் செய்ய ஆசான் அருளியுள்ளார்.)

ஆகுமே மணம் தாமத வினையுள்ளோர்பால்
அதற்குரிய தட்சணையாய் **இரு சகஸ்திரம்** (ரூ.2,000)
வாகுடனே பெற்றுமே ஏழைகட்கு
வருமுலகில் மணம் செய்து வைக்கலாகும் 24.

**ஆகுமே சுவடி மூலம் வருபவர்களுக்கு**
**அவனியிலே சிறப்பு தரிசனம் அளிப்பாயப்பா**
**வாகுடனே இதற்குரிய ஏற்பாடுகளை**
**வருமுலகில் நடராஜன் ஏற்க வேண்டும்** 25.

**வேண்டியே அன்னதான பொறுப்புகளை**
**விளம்பிடவே செந்திலோன் தலைமையில் மட்டும்**
**கொண்டுரைக்க எத்தனை மூடை(மூட்டை) அரிசிகள்**
குவலயத்தில் எவ்வளவுபேர் உண்டனர் விபரம் 26.

விபரமதை செந்திலோன் மட்டுமே ஆசானிற்கு
விளக்கமதை அளித்திடல் வேண்டுமென்பேன்
**தபயோகம் ஆசானும் முழுமை பெறவே**
தரணியிலே செல்கின்ற காரணத்தால் 27.

**காரணத்தால் குடிலதனில் நிறை குறைகள்**
**கண்டுரைக்க மாதவனின் மூலமாக மட்டும்**
**பாரதனில் ஆசானிடம் எடுத்துச் சொல்லல் வேண்டும்**
**பாருலகில் நேரடியாய் குறை கூறுதல்** 28.

கூறுதலை தவிர்த்திட வேண்டுமென்பேன்
குவலயத்தில் முழுமதிநாள் பூஜை தன்னில்
அருளுரைகள் முன்பின்னும் ஆசான் வழங்க
அறிவிப்பேன் கொங்கணர் என் ஆசியுண்டு 29.

உண்டான குடிலதுவும் அறக்கட்டளை அமைப்பே
உத்தமமாய் குடிலதனில் அறங்காவலர்கள்
உண்டான முழுவீச்சில் செயல்படுதல் வேண்டும்
ஒவ்வொரு செயலுக்கும் விளக்கம் தன்னை 30.

தன்னிலே ஆசான்பால் கேட்கலாகா
தரணியிலே அமைப்பு ரீதியான செயல்பாடுகள்
நன்மைதர வலுப்பெற வேண்டுமப்பா
நீதி தவறாது அறங்காவலர்கள் 31.

அறங்காவலர்கள் செயல்பட வேண்டுமப்பா
அறிவித்தேன் கொங்கணர்யான் கட்டளை தன்னை
தரணியிலே இன்றுமுதல் கொங்கண மகரிஷியான்
தானுன்னுள் இறங்கியே அருள்பாலிப்பேன் 32.

அருள் பாலிக்க இம்முறைகள் செயலுக்கு வர
அரங்கா நீ உத்தரவு அளிப்பாயப்பா
அருள் ஓங்கும் உந்தனுக்கும் தவமும் வெற்றி
அறிவித்த முறைசெய்ய மாறாது ஓங்கும் 33.

ஓங்கவே கொங்கணரும் சுவடி வழி
உந்தனுக்கும் வினையண்டா இளமை ஓங்க
ஓங்கவே வழிமுறைகள் அளித்தேன் யானே
ஓதிவந்த நித்திய ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 34.

**.....சுபம்.....**

**மேற்கண்ட கவிகளின் சாரம் :**

ஓங்காரக்குடிலில் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளை ஏழு அடி எட்டி நின்றுதான் வணங்கவேண்டும் என்று

பாண்டிச்சேரி அகத்தியர் நாடியில் வந்துள்ளது. அதனால், அன்பர்கள், ஏழு அடி தள்ளி நின்றே வணங்கவேண்டும். ஆசானிடம் ரூபாய் 1008 அன்னதானத்திற்கு கொடுத்தால் மட்டும் அருகில் வந்து ஆசிபெற வாய்ப்புண்டு அல்லது ரூபாய் 108 கொடுத்து ஆசிபெறலாம்.

மேலும், நேரில் வந்து ஆசிபெற வாய்ப்பில்லாத அன்பர்கள், ஒரு வெள்ளைத்தாளில் தங்கள் குறைகளை எழுதி, அம்மா மண்டபத்தில் உள்ள வேண்டுகோள் பெட்டியில் போட்டுவிட வேண்டும்.

திருமணம் தடைப்பட்டவர்கள் ரூபாய் 2,000 காணிக்கை செலுத்தினால் திருமணம் தடையில்லாமல் நடக்கும். திருமணத்திற்கு தடையாக இருப்பது ராகு தோஷம், சனி தோஷம், செவ்வாய் தோஷம் ஆகும். மேற்கண்ட தோஷங்களை எல்லாம் ரூபாய் 2,000 காணிக்கை செலுத்தி நீக்கிக்கொள்ள வேண்டும். மேலும், சில குறைகள் உள்ளவர்கள் 11 வாரம் குடிலுக்கு வந்து ஜோதி மண்டபத்தில் ஆசிபெற வேண்டும். அதைச்செய்ய வாய்ப்பில்லாதவர்கள், 11 நாட்கள் அகவல் பாராயணத்தில் கலந்து கொண்டால் போதும். எல்லா துன்பங்களும் நீங்கும்.

குடிலில் சமைக்கப்படும் உணவை ஆசான் ஞானபண்டிதரும், ஆசான் அகத்தீசரும், ஆசான் இராமலிங்க சுவாமிகளும், ஆசான் திருஞான சம்பந்தரும் பார்த்து அந்த உணவிற்கு அருள் வழங்குவதால் அந்த உணவை உண்ணுகின்ற மக்களுக்கு உடல் நோயும், முன்செய்த வினைகளும் நீங்கும்.

மேற்கண்ட எல்லாவற்றிற்கும் திருப்பதியிலிருந்து அருள் செய்து கொண்டிருந்த மகான் கொங்கணனேஸ்வரர் ஓங்காரக் குடிலாசானுள் அமர்ந்து அருள் செய்கிறார்.

எனவே, அன்பர்கள் ஓங்காரக்குடிலுக்கு வந்து செல்வதும், இங்கே தருகின்ற பிரசாதத்தை உண்ணுவதும் பெரும் புண்ணிய செயல்களாகும். இந்த அரிய வாய்ப்பை அன்பர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், மேற்கண் செயல்பாடுகளுக்கு மூன்றுபேர் பொறுப்பேற்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். ஓங்காரக்குடில் கொள்கை பரப்பாளர் ந. நடராஜன் அவர்களையும், அன்னை மருத்துவமனை நிர்வாகி இரா.

மாதவன் அவர்களையும், அன்னதானப் பொறுப்புகளை அயராது செய்து வரும் சு. செந்தில்குமார் அவர்களையும் பொறுப்பேற்க வேண்டும் என்று ஆசான் கொங்கண மகரிஷி அவர்கள் கட்டளை இட்டுள்ளார்கள்.

ஓம் ஸ்ரீ அகத்தியர் துணை

**14–02–2003, வெள்ளிக்கிழமையன்று,** திருச்சி சங்கிலியாண்டபுரத்தில் உள்ள ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிடர் திரு. **V.T. பரணீதரன்** அவர்கள் மூலமாக **ஓங்காரக்குடிலாசான்,** தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின் தவச்சிறப்புகளைப் பற்றியும், அன்பர்கள் நடந்துகொள்ளக்கூடிய முறைகளைப்பற்றியும் மகான் கொங்கணேஸ்வரர் அவர்கள் தம் சுவடிமூலம் அருளிய அருள் வாக்கு.

இந்த நூல் தெய்விகமானது. இதை பயபக்தியுடன் படிப்பது நல்லது.

## ஸ்ரீ கொங்கணேஸ்வரர் ஆசி காண்டம்

அருள்ஞான தெய்வமே அரங்கா போற்றி
அருளதனை வழங்கிவரும் அரசா போற்றி
அருள்ஞான தலைவரே தேசிகா போற்றி
அறுமுகன் உன்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே கொங்கண மகரிஷி யானே
புகலவந்தேன் அருள்வாக்கில் இன்று நாளில்
உற்றதொரு நூலாசான் மூலமாக
உந்தனுக்கு அருள்பெருக உபாயம் தன்னை 02.

தன்னிலே வழங்க வந்தேன் அறிவாயப்பா
தவயோக ஓங்கார திருக்குடிலில் தான்
உண்மையுடன் தர்மதரிசன நாழிகை சொல்வேன்
உதயகாலம் நாமவேள்வி முடிந்து ஏக நாழிகையும் 03.

நாழிகையும் உச்சிவேளை நைவேத்தியம் முடித்து (உணவுக்கு பின்)
நானிலத்தில் ஏகநாழிகை தரிசனமும்
தெளிவுதரும் சந்திவேளை அகவல் பாடியவுடன்
தரிசனமும் ஏகநாழிகை அளிக்கலாகும் 04.

ஆகுமே கொங்கணர் என் ஆசியுண்டு
அவனியிலே மற்ற நாழிகைகளில் கட்டணமின்றி
யோகம்தரும் கடவுள் உன்னை காணலாகா
உலகத்தில் குபேரனிடம் தனம் பெற்று 05.

பெற்றுமே மணம் கண்டு ருணம்பட்டார் (கடன்) திருமலை
தெய்வம் (திருப்பதி வெங்கடாஜலபதி)
பேசிட்டேன் திருமலையான் ருணம்போக்க திருமலையில்
உற்றதொரு குடிகொண்டு அருள் பாலித்தேன்
உலகத்தில் அரங்காநீ அற்றார் அழிபசி தீர்த்து 06.

தீர்த்துமே ருணம்பட்டாய் (கடன்) என்று சொல்வேன்
தெரிவிக்க உன்ருணம் நீக்க உறுதி பூண்டேன்
பார்த்துரைக்க நூலாசான் பயணம் தடுத்து
பாருலகில் ஓங்காரக்குடிலில் அமர்ந்து விட்டேன் 07.

**அமர்ந்துவிட்டேன் மக்கள் குறை தீர்ப்பதற்கும்**
**ஆண்டாண்டாய் அருள்தீட்சை வழங்கிய அரங்கா**
நேசமுடன் ஈராண்டு வெண்துகில் தீட்சை
நிலமதனில் அளித்துவிட்டாய் நன்மை பெருக 08.

பெருகவே மூலரின் வாக்கை ஏற்று
பேசிட்டாய் மகாமந்திர உபதேச தீட்சை
அருள்பெருக வைத்திட்டாய் மக்களுக்கு
அரங்கா உன் தொண்டை கண்டு மகிழ்ந்தேன் யானே 09.

மகிழ்ந்துவிட்டேன் தைபூசம் அன்றுதானே
மேலும் ஒரு தீட்சை அளிப்பாய் வேண்டுவோர்க்கு
**மகிழ்வுதரும் அத்த மத்தக சையோக தீட்சை**
மகான் நீ வள்ளலாக வாழ்ந்த போது 10.

(அத்த மத்தக சையோக தீட்சை பெற ரூபாய் 1008 காணிக்கை செலுத்துகின்ற அன்பர்கள் சிரம்மீது ஆசான் கரம் வைத்து ஆசி வழங்குவதுதான் அத்த மத்தக சையோக தீட்சை ஆகும்.)

போதினிலே அருட்பெருஞ்சோதி ஆண்டவர் உமக்கருளிய
பூவுலகில் அரிய தீட்சை இது என்று சொல்வேன்
மேதினியில் இத்தீட்சையை எந்நாளும் அளிக்கலாம்
முழுநிலவு நாளில் பெறுவோர்க்கு முழுபலன் கிட்டும் 11.

கிட்டுமே பன்னிரு தீட்சை முழுமதி நாளில்
கேட்டிடுவாய் பெற்றவர்க்கு ஞானம் சித்தி
திட்டமுடன் மரணமிலா பேறு பெறுவார்
தெரிவிக்க குடிலதனில் துலாக்கோல் (தராசு)
ஒன்று நிறுவி 12.

**நிறுவியே எடையின் அளவு தானியம் அளிப்போர்**
**நிலமதனில் எண்ணிய எண்ணியாங்கு பெறுவார்**
குறைகள் உள்ளோர் பேசும் தெய்வம் உன்னிடம்
குறைகள் கூறி எடையளவு தானியம் தானமீய 13.

ஈயவே நேர்ந்து(வேண்டி) கொண்டால் குறைகள் பறந்தோடும்
இவ்வுலகில் வினைகளும் அண்டாது விலகும்
நேயமுடன் கொங்கணரும் அளித்தேன் ஆசி
நிலமதனில் பொருள் அற்றோர் குறையுள்ளோருக்கு 14.

உள்ளோருக்கு உபாயம் ஒன்று கூறுகின்றேன்
உலகத்தில் திருக்குடிலில் உண்டியல் பேழை பெற்று
நல்விதமாய் அமைத்துமே அதில் எண்ணிய போதெல்லாம்

நாணயம் சேர்த்து நிறைந்தவுடன் தான் 15.

(ஓங்காரக்குடிலில் நடராஜனிடம் அன்னதான உண்டியல் பெற்று அவரவர் விருப்பமான தொகையைப் போட்டு நிரப்பி ஆசானிடம் ஒப்படைத்து ஆசிபெற வேண்டும்)

தான்புகல நித்திய தெய்வம் நின்திருவடிகளுக்கு
தரணியிலே சமர்ப்பணம் செய்தால் அவர்தம் குறைகளும்
உண்மையுடன் வினைகளும் பறந்தோடும்
உண்டியல் பேழை மற்றும் எடை எந்திரத்திற்கும் 16.

**இயந்திரத்திற்கு உத்தம தொண்டன் நடராஜனே பொறுப்பு ஏற்பான்**
**இவ்வுலகில் கொங்கணர் என் முதல் கட்டளைகளையும் சேர்த்து**
**நேயமுடன் அச்சிட்டு சிறுநூலாக வெளியிடவே**
**நிலமதனில் அருந்தவ மாதவனுக்கு ஆணையிடுகிறேன் 17.**

**ஆணையே அனுதினமும் அனல்ஏற்றி அன்னம் படைத்து**
**அமுதயாகம் வளர்க்கும் செல்வன் செந்தில்**
**வெற்றிவேல் குமரனாவான்**
**இணையில்லா உன்தொண்டர் அனைவருமே மரணமிலா**
**பேறுபெற்றோர் ஆவார்**
**இயம்பிவந்த கொங்கணர் என் ஆசிநூல் முற்றே 18.**

**.....சுபம்.....**

16 – 02 – 2003 – மாசி பௌர்ணமி

பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின்

உபதேசம்

மனிதனாகப் பிறந்தால் மோட்சகதி அடைய முயலவேண்டும். மோட்சகதி அடைவதற்கு புலால் மறுத்தல், உயிர்க்கொலை செய்யாது இருத்தல், ஏழைகளுக்குப் பசியாற்றி வைத்தல் மற்றும் தினமும் காலை மாலை **ஓம் இராமலிங்கசுவாமிகள் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்ய வேண்டும்.

தினமும் நாமஜெபம் செய்யச்செய்ய முன்செய்த பாவங்கள் தீரும். பாவங்கள் தீர்ந்தால் புண்ணியம் பெருகும் மற்றும் பொல்லாத வறுமை நீங்கும், செல்வமும் பெருகும், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். மேலும் பண்புள்ள புத்திரப்பாக்கியமும் தோன்றும், உடல் ஆரோக்கியமும் நீடிய ஆயுளும் உண்டாகும், தகுதியுள்ள நட்பு அமையும். மேலும், சூதாடுதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களும் நீங்கும்.

கணவன் மீது மனைவி சந்தேகப்படுதல், மனைவிமீது கணவன் சந்தேகப்படுதல், மேலும் தகுதியுள்ள நண்பர்கள்மீது சந்தேகப்படுதல், நல்ல பண்புள்ள வேலையாட்கள் மீது சந்தேகப்படுதல் ஆகிய அறியாமை நீங்கி எது உண்மை? எது பொய்? என்று அறிந்துகொள்ளும் ஆற்றல் உண்டாகும்.

சந்தேகப்படும்முன், இதில் உண்மை உண்டா இல்லையா் என்பதை நாமே அறிந்துகொள்ளும் அறிவு உண்டாகும். பண்புள்ள மனைவிமீது கணவன் சந்தேகப்படுவதும், தகுதியுள்ள கணவன்மீது மனைவி சந்தேகப்படுவதாலும் தேவையில்லாத குழப்பங்கள் உண்டாகும். தகுதியுள்ள நண்பர்கள்மீதும், நல்ல வேலையாட்கள் மீதும் சந்தேகப்படுதல் தக்க பாதுகாப்பை இழக்கும் சூழ்நிலை உண்டாகும்.

மேலும் நமக்கு வரும் துன்பங்களுக்குக் காரணம், நாம் முன்செய்த பாவங்கள்தான் என்று அறியவேண்டுமே தவிர மற்றவர்கள் நமக்கு செய்வினை செய்துவிட்டார்கள் என்று எண்ணுவது நமக்கு நாமே துன்பத்தை உண்டாக்கிக்கொள்வதாகும்.

மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்பதற்காக கடன் வாங்கி வீடு கட்டுவதும், நகைகள் ஆடம்பரப்பொருட்கள் வாங்குவதும் அறியாமை என்று உணரக்கூடிய அறிவு வரும். மேலும் புது வீடு கட்டவேண்டும் என்றால் நமது தகுதியையும் வருவாயையும் அனுசரித்து அதற்கு ஏற்றாற்போல் வீடு அமைக்கும் சிறப்பறிவு உண்டாகும்.

தொடர்ந்து **ஓம் இராமலிங்கசுவாமிகள் திருவடிகள் போற்றி** என்று பூஜித்து வந்தால் மனைவி வீட்டில் இருந்து வரதட்சணை கொண்டு வா என்று கொடுமை செய்வது பாவம் என்று உணரக்கூடிய பக்குவம் வரும். மேலும், மனைவி துன்பப்பட்டால் அதைக்கண்டு இரக்கம் காட்டக்கூடிய அறிவு வரும்.

பெண்களும் நாமஜெபம் செய்து வந்தால் கணவனின் வருவாய்க்குத் தக்க குடும்பம் நடத்த வேண்டும் என்ற பக்குவம் வரும். கணவனுடைய வருவாயை அறியாது வீண் ஆடம்பரச்செலவுகள் செய்யும் அறியாமை நீங்கும். மேலும், மற்றவர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு அதில் நாம் கவனம் செலுத்துவது பயனற்றது என்ற சிறப்பறிவு உண்டாகும்.

மேலும் பெண்கள் தொடர்ந்து நாமஜெபம் செய்து வந்தால் இரவு 10 மணிக்குமேல் டி.வி பார்த்து உடல் ஆரோக்கியத்தை கெடுக்கும் என்பதை உணரலாம் மற்றும் வெள்ளைப்படுதல், உதிரப்போக்கு உள்ளவர்கள் தேவையில்லாமல் உணர்ச்சி வசப்படுதல் மேலும் நோய் மிகுதியாகும் என்பதையும் உணரலாம்.

தொடர்ந்து நாமஜெபம் செய்துவந்தால் உணர்ச்சி வசப்படாமல் எதையும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் பக்குவம் உண்டாகும். மாமனார், மாமியார், நாத்தனார்

மற்றும் கணவர் ஆகிய இவர்களும் நமது மனம் புண்படும்படி பேசினாலும் அதைப்பற்றிக் கடுகளவும் கவலைப்படமாட்டார்கள். எதையும் தாங்கி வாழ்க்கையை செம்மையாக நடத்தவேண்டும் என்ற வல்லமை உண்டாகும்.

**எனவே, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகளை பூஜிப்போம், இல்லறத்தையும் நல்லபடி நடத்துவோம், ஞானமும் பெற்று இன்புற்று வாழ்வோம்.**

ஓம் ஸ்ரீ அகத்தியர் துணை

**16 – 02 – 2003, ஞாயிற்றுக்கிழமையன்று,** திருச்சி சங்கிலியாண்டபுரத்தில் உள்ள ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிடர் **திரு. V.T. பரணிதரன்** அவர்கள் மூலமாக **ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின் தவச்சிறப்புகளைப் பற்றியும், அன்பர்கள் நடந்துகொள்ளக்கூடிய முறைகளைப்பற்றியும் **மகான் ஸ்ரீ சிறப்புலி நாயனார் அவர்கள் தம் சுவடிமூலம் அருளிய அருள் வாக்கு.**

## மகான் ஸ்ரீ சிறப்புலி நாயனார் ஆசி காண்டம்

சிறப்புதரும் பெரும்புலியே அரங்கா போற்றி
சிறப்புதரும் பெரும் கருணையே அரசா போற்றி
சிறப்புதரும் பெரும் யோகி தேசிகா போற்றி
சிறப்புதரும் நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே சிறப்புலி நாயனார் யானே
புகலவந்தேன் ஆசியின் இப்பாகம் தான்
பார்காக்கும் ஈசன்நீ வாழ்க வாழ்க
பாருலகில் ஆழ்ந்த பக்தி கொண்டாய் நீயே 02.

கொண்டுமே மக்களுக்கே தொண்டை செய்தாய்
**குவலயத்தில் ஞானிகளை வழிபட்டாய் நீயே**
**உண்டான இரவும் பகலும் ஞானிகள் நாமம்**
**உள்ளன்புடனும் பரவசத்துடனும் உச்சரித்தாய்** **03.**

**உச்சரித்தாய் அமுதயாகம் நாளும் செய்தாய்**(நித்திய அன்னதானம்)
உலகத்தில் இந்தவித காரணத்தால்
அச்சமிலா ஞானிகளின் கருணை பெற்றாய்
அவனியிலே ஞானிகளின் நாமம் தன்னை **04.**

தன்னிலே இடைவிடாது உச்சரித்தல்
தரணியிலே ஞானநிலை அடைவதற்கு
**நன்மைதரும் மிகமிக எளிய பயிற்சி**
**நானிலத்தில் அளவிடமுடியா நன்மைகளை** 05.

**நன்மைகள் மக்களுக்கும் நல்க வல்லது**
**நானிலத்தில் அறிவில்லா மானிடனும்** (கல்லாத மூடர்களும்)
**நன்மையிலா மாயைநிரம்பி இதனை செய்ய**
**நாட்டிடுவேன் மறுத்துமே அலைகிறானே** **06.**
(எளிய வழிபாட்டை விட்டுவிட்டு கடவுளை அடைய ஊர் ஊராக சுற்றுகிறான்)

அலைபவர்க்கும் சிறப்புலியான் அறிவுரை சொல்வேன்
**ஆதரவாய் ஞானிகளின் நாமம் தன்னை**
**சளைக்காது இடைவிடாது உச்சரித்தால்**
**சாற்றிடுவேன் மனக்கருத்துக்கள் முற்றிலுமாய்** **07.**

**முற்றிலுமாய் மாறுதலை தான்அடைந்து**
**மொழிகுவேன் தெய்வீக அருளை மனமே பெற்று**
**உற்றதொரு மிகஉயர்ந்த சக்தியை அடைவார்**
உலகத்தில் இடைவிடாத நாமஜெபத்தால் **08.**
(ஞானிகள் நாமத்தை சொன்னால் மிக உயர்ந்த சக்திகள் அடைவார்)

**நாமஜெபம் அடிப்படை மாறுதல் உண்டாக்கி**
**நானிலத்தில் உடல் அளவிலும் வலிமை அளவிலும்**
**நேமமுடன் மனஅளவிலும் மனதத்துவ அளவிலும்**
**நிலமதனில் ஆன்மீக அளவிலும் குணப்படுத்தும் 09.**
(நாமஜெபம் செய்வதே பெரிய மாற்றத்தை உண்டுபண்ணும்)

குணப்படுத்தி யோகமதை அருளுமப்பா
குவலயத்தில் உணர்ந்ததொரு ஆசான் நீயே
இணக்கமின்றி நம்பமறுக்கும் மனிதன் அறியாமை
இவ்வுலகில் மிகவும் பெரிது தானே 10.

பெரியதொரு யோகத்தை புரிந்த அரங்கா
**பேசிடுவேன் ஞானிகளின் திருநாமத்தை**
**நிறைவாக இடையறாமல் உச்சரித்து வருவதே**
**நிலமதனில் மிகப்பெரிய யோகநிலையாகும் 11.**

யோகமதை புரிந்திட்ட அரங்கா வாழ்க
ஓதினேன் ஆசியதை சுவடி மூலம்
யோகிஉன் தவம் வெற்றி வெற்றி வெற்றி
உரைத்தேனே சிறப்புலியான் சிறப்பு பெறவே 12.

சிறப்ளிக்கும் உன்தவமே உலகை காக்கும்
சிறப்புதரும் ஞானிகளின் அருளை பெற்றாய்
சிறப்பளிக்கும் பெருங்கருணையே வாழ்க வாழ்க
செப்பிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 13.

**.....சுபம்.....**

## ஆன்மீகவாதிகள் தன்னைக் காத்துக்கொள்ள அறிவுரை

**மகான் ரோமரிஷி அவர்கள் இயற்றிய பூஜா விதி 7–ல் கவி எண் 2ல் பாடிய பாடல் :**

**காப்பான கருவூரார் போகநாதர்**
**கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்**
**மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர்**
**முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்**
**கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்**
**கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்**
**வாப்பான வாதத்திற்கு ஆதியான**
**வாசமுனி கமலமுனி காப்புத்தானே.**

மேற்கண்ட பாலில் காப்பான கருவூரார் போகநாதர் என்றும், கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர் என்றும், மூப்பாண கொங்கணரும் பிரம்மசித்தர் என்றும், முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர் என்றும், கோப்பான கோரக்கர் பதஞ்சலியார் என்றும், கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர் என்றும், வாப்பான வாதத்திற்கு ஆதியான வாசமுனி (வாசமுனி என்பது துர்வாசர் ஆகும்) கமலமுனி என்றும் ஆசான் ரோமரிஷி அவர்கள் தம் கவியில் பாடியுள்ளார்கள். **இவர்கள்தான் இல்லறம் மற்றும் துறவறத்திற்கு பாதுகாவலர்களாக இருப்பார்கள்.**

மாமேரு எனத்திகழும் இந்த 14 ஞானிகள் அடங்கிய இந்த பாடலை தினமும் காலையிலும், மாலையிலும் படித்து பாராயணம் செய்தும், தினமும் பூஜைசெய்தும் வந்தால் மனிதவர்க்கம் அடையமுடியாத, அறியமுடியாத, உணர முடியாத ஒன்றை நாம் உணர முடியும்.

மேலும், பொல்லாத வறுமை தீரும், கொடிய நோய் தீரும், தீராத நியாயமான வழக்குகள் தீரும், குடும்பத்தில் அமைதி ஏற்படும். தீய நட்பு நம்மை சார்ந்திருந்தாலும் தானே விலகிவிடும். பண்புள்ள புத்திரப்பாக்கியம் அமையும், சொந்த வீடு இல்லாதவர்களுக்குச் சொந்த வீடு அமையும். தீராத கடன் சுமையும் தீரும், செல்வமும் பெருகும், தகுதியுள்ள நட்பும் அமையும், தீய பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தாலும், தீய பழக்கங்கள் நீங்கிவிடும். கொடிய பகையும் நீங்கும், மன அமைதி ஏற்படும். எதையும் ஆழ்ந்து சிந்திக்கூடிய சிறப்பறிவு உண்டாகும்.

மேலும், ஆன்மா மாசுபடுவதை அறிந்து மாசை நீக்கிகொள்ளவும் அறிவு உண்டாகும். **நாம் மேற்கொள்ளும் காரியங்கள் எதுவானாலும் குறிப்பாக உத்தியோகம், தொழில், வியாபாரம், விவசாயம், இன்னும் குடும்பத்தில் சுபகாரியங்கள் எதுவானாலும், தடையில்லாமல் நடக்கும். எதிலும் வெற்றி, எப்போதும் வெற்றி, வெற்றியோ வெற்றி.**

**குறிப்பு**

**01.** தவம் என்பதே ஞானிகளின் திருவடியைப் பூஜிப்பதுதான் தவமாகும். மற்றதெல்லாம் அவமாகும். ஆகவே, அகத்தீசரைப் பூஜிப்போம், அருள்பெற்று வாழ்வோம்!

02. மேற்கண்ட ஞானிகள் அத்தனைபேரும் புண்ணியமும், அருந்தவமும் செய்து, மிகப்பெரிய அருளாற்றல் பெற்றுள்ளார்கள். இந்தப் பாடலைப் படித்தாலே சாகாக்கலைப் பற்றியும், சாகாக் கல்வியைப் பற்றியும் அறியலாம்.

## சித்திக்கு வழிகாட்டும் தேன்

லபிக்கவழி (சித்திக்க வழி) சொல்லுகிறேன் ஆத்தாளே நந்திதிருமூலரையும்
லபிக்கக்காலாங்கியையும் ஆத்தாளே நாதாந்தபோகரையும்
சத்திசிதம்பரமும் ஆத்தாளே சட்டமுனி பூசைசெய்வாய்
உத்தமக்கொங்கணரை ஆத்தாளே உசிதமாய் பூசைசெய்வாய்
கருவூரார் ஆனந்தர் ஆத்தாளே கண்டு வழிதெரிந்தோர்
ஒருநெறியாய் இவர்களையும் ஆத்தாளே உண்மையுடன் பூசைசெய்தால்
சண்டாளன் ஆனாலும் ஆத்தாளே தான் வேதைகாண்பானே
கண்டசோதி சொன்னேன் நான் ஆத்தாளே.

மகான் அழுகண்ணர்.

மேற்கண்ட மகான் அழுகண்ணர் கவியின் சாரம் :

இயற்கைப் படைப்புகளில் மனிதவர்க்கம்தான் உயர்ந்ததாகும். காரணம் மரணமில்லாப் பெருவாழ்வு பெறுதற்குரிய அறிவு இவர்களுக்குத்தான் உண்டு. மனிதனுக்குள் சொர்க்கமாகிய மோட்சத்தை எல்லாம்வல்ல இயற்கை அன்னை

அமைத்திருக்கிறாள். அப்படி அமைத்திருந்தாலும் அதை நம்மால் உணர முடியாது. அதைப்பற்றி நன்கு உணர்ந்தவர்கள் நமக்கு உபதேசிக்க (சொல்ல) வேண்டும். இல்லையென்றால் நம்மால் அதை அறிந்துகொள்ள முடியாது. அறிந்தவர்கள் நமக்குச் சொல்ல வேண்டுமென்றால் அதற்குரிய கொள்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். பசியாற்றி வைத்தலும், ஞானிகள் யார் என்று அறிந்து அவர்களின் திருவடியை உருகி பூஜித்தலும் வேண்டும்.

பூஜை செய்ய, பூஜை செய்ய சிறப்பறிவு உண்டாகும். அன்னதானம் செய்து வந்தால் புண்ணியமும் உண்டாகும். பூஜை செய்வதால் அருள் பலமும், அன்னதானத்தால் புண்ணியபலமும் சேரும். புண்ணிய பலமும், அருள் பலமும் சேரச்சேர எது நன்மை? எது தீமை? என்று உணர முடியும். நன்மையானவற்றைக் கடைப்பிடிப்பதும், தீமையானவற்றை நீக்கவும் நமக்கு ஆற்றல் உண்டாகும். உயிர்க்கொலை செய்வதாலும், புலால் உண்பதாலும் மனம் மென்மை ஏற்படாது.

பொருள் சேர்க்கும் பொழுது இது நீதிக்குட்பட்டதா? அல்லது பிறர் வயிறெரிய வந்ததா? என்று உணர முடியும். மேலும் பொருளாதாரத்தின் இயல்பும் அறியலாம். இயல்பு அறிந்தவர்கள்தான் தனக்குப்பொருள் சேரும்பொழுதே அறப்பணிகள் செய்து ஆன்மபலம் பெற்றுக்கொள்வார்கள். ஆன்மபலம் பெற்றுக்கொண்டவர்களுக்குத்தான் முன்செய்த பாவத்தால் வருகின்ற தீமைகளை உடைத்தெறியும் வல்லமை உண்டு. மேலும் ஆன்ம ஜெயமாகிய (உயிராகிய மூச்சுக்காற்று புருவமத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்குவதாகும்) ரகசியத்தையும் அறிந்துகொள்வார்கள், உடலின் மாசையும் அறிந்துகொள்வார்கள், அறிந்து கொண்டால் மட்டும் போதாது. உடல் மாசாகிய களிம்பு நீங்க வேண்டும், நீங்கினால் இந்த உடம்பு ஒளி உடம்பாகும்.

ஒளி உடம்பு பெறவேண்டுமென்றால், மகான் அழுகண்ணர்சித்தர் பாடிய பாடலில் உள்ள ஞானிகள் நந்திசர், திருமூலதேவர், காலாங்கிநாதர், போக மகாரிஷி, மகான் சட்டைமுனிநாதர், கொங்கண மகரிஷி, கருவூர் தேவர், சுந்தரானந்தர் மேற்கண்ட எட்டு மகான்களும் மரணமில்லாப்பெருவாழ்வு பெற்றவர்கள் ஆவார்கள்.

அவர்களின் திருவடியை யார் உருகி பூஜை செய்கிறார்களோ, அவர்களின் பாவங்களை எல்லாம் பொடிப்பொடியாக்கி, மரணமில்லாப் பெருவாழ்வு பெறச்செய்வார்கள். அவர்கள் ஆணைப் பெண்ணாக்குவார்கள். பெண்ணை ஆணாக்குவார்கள். இறந்தவர்களையும் உயிர்பெறச் செய்வார்கள். இப்பேர்பட்ட

ஆற்றல் பெற்றவர்களை அறிந்து பூஜை செய்வதே உண்மையான கல்வியாகும். மற்ற கல்வியெல்லாம் உணவு, உடை மற்ற வசதிகளுக்காக பயன்படுமே தவிர பிறவிப் பிணிக்கு மருந்தாக அமையாது.

எனவே, மகான் அழுகண்ணர் அவர்கள் உலகமக்கள்பால் கருணை கொண்டு இந்தப் பாடலை அமைத்துள்ளார்கள். மேற்கண்ட ஞானிகளைத் தினமும் பூஜித்து வந்தால் பஞ்சமா பாவிகளாகிய சண்டாளர்களுக்கே ஞானம் சித்திக்கும் என்று சொல்கிறார். இந்தக் காலத்தில் ஆன்மீகம் என்ற பெயரில் சிறு தெய்வங்களுக்கு உயிர்க்கொலை செய்தும் மற்றும் ஆரவாரச் சடங்குகள் செய்தும் ஆன்மலாபம் பெறாது தன் பிறவியைப் பயனற்றதாக்கிக் கொள்கிறார்கள். வரப்போவது ஞானச்சித்தர் காலம் என்பதால், **மேற்கண்ட ஞானியர் வழிபாடுதான் நிலைத்து நிற்குமே தவிர மற்றதெல்லாம் ஆடிக்காற்றில் இலவம்பஞ்சுபோல் நிலைபெறாது ஓடிவிடும்.**

**குறிப்பு :** மேற்கண்ட எட்டு மகான்களில் யாரை அழைத்தாலும் அச்சணமே வந்து **அஞ்சேல்** என்று சொல்லக்கூடிய வல்லமை அவர்களுக்கு உண்டு. இதைப்பற்றி அறிந்துகொள்வதே சாகாக்கல்வி ஆகும். எனவே,

**ஞானியர்களைப் பூஜித்தால் ஞானம் பெற்று, இன்புற்று வாழ்வார்கள் என்பது சத்தியம்.**

## பக்தி செலுத்த அறிவுரைகள்

**மகான் சட்டைமுனிநாதர் அவர்கள் இயற்றிய ஞானவிளக்கம் 51–ல் 21–ஆம் பாடல் :**

**போடுவது திலதமடா மூலர் மைந்தர்**
**போகர் கருவூராரைத் தியானம் பண்ணு**
**நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து**
**நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா**
**ஏடுதனில் எழுதினதோர் பாடல் என்று**
**எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை**
**தேடினப்பேர் பொருள்கோடி தனமீந்தாலும்**
**செப்பாதே இக்கருவை** (ரகசியத்தை) **உலகத்தோர்க்கே.**

**மேற்கண்ட பாடலின் சாரம் :**

வைணவர்கள் நெற்றியில் நாமம் இடும்பொழுது **ஓம் நமோ நாராயணா** என்றோ **ராமா** என்றோ நாமமிட்டுக்கொள்வார்கள். சைவர்களோ நெற்றியில் விபூதி வைக்கும்பொழுது **ஓம் விக்னேஷ்வரா** என்றோ **ஓம்முருகா** என்றோ **ஓம் நமச்சிவாய** என்றோ அல்லது **சிவ சிவ** என்றோ நெற்றியில் விபூதி வைத்துக்கொள்வார்கள். அது அவரவர்களின் கொள்கையாகும்.

மகான் சட்டைமுனிநாதர் அவர்களோ நெற்றியில் விபூதி வைக்கும் பொழுது **ஓம் திருமூலதேவாய நம** என்றும் அவர் மைந்தராகிய காலாங்கிநாதரை **ஓம் காலாங்கிதேவாய நம** என்றும் **ஓம் போகதேவாய நம** என்றும், **ஓம் கருவூர் தேவாய நம** என்றும் நான்கு மகான்களின் நாமத்தைச்சொல்லி, நெற்றியில் வைத்தால், கணக்கில் அடங்காப் பிறவிகள் எடுத்துச் செய்த பாவங்கள் பொடிபட்டுப்போகும். மேலும், ஞானியும் ஆவார்கள் என்று சொல்கிறார்கள்.

இந்த உலகில் உள்ள சில ஆன்மீகவாதிகளோ மற்றும் உள்ள சில கல்வியாளர்களோ இதை யாரும் பின்பற்றுவதில்லை. காரணம், அவர்களுக்கு யாரும் இந்த உயர்ந்த உபதேசத்தை உபதேசிப்பதில்லை. அப்படியே சிலர் உபதேசித்தாலும், சிலர் அதைக் கடைப்பிடிப்பதில்லை. அது அவரவர்களின் வினைப்பயன். இந்த உயர்ந்த மார்க்கத்தை ஆசான் சட்டைமுனிநாதர் ஏதோ ஏட்டில் எழுதி வைத்துவிட்டார் என்று லேசாக நினைத்து விடவேண்டாம். இந்த மார்க்கத்தை புண்ணியம் செய்த மக்களே உணர்வார்கள், மற்றவர்களோ இதை உணரமாட்டார்கள். அது அவர்களின் வினைப்பயனாகும்.

இந்த உயரிய மார்க்கத்தை மகான் சட்டைமுனி அவர்கள் **உலக ஆன்மிகப் பிள்ளைகளே! பிழைத்துக்கொள்ளுங்கள்!** என்று கருணையோடு சொன்னதாகும். எனவே, காலை 5 மணிக்கு எழுந்து காலைக்கடனை முடித்துவிட்டு, வெண்ணிறத் துணியை விரித்து, அதன்மேல் அமர்ந்து திருவிளக்கு ஏற்றியும், நறுமணம் உள்ள பத்தி ஒன்றை வைத்தும், காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் **ஓம் திருமூலதேவாய நம, ஓம் காலாங்கிதேவாய நம, ஓம் போகதேவாய நம், ஓம் கருவூர் தேவாய நம** என்று திரும்பத்திரும்ப நான்கு மகான்களின் நாமத்தை நாமஜெபம் செய்து வந்தால் விடுபேறு அடையலாம் (முக்தி பெறலாம்). **மேற்கண்ட பாடல் வைரம் பொருந்திய தீவினையாகிய மரத்தை வேரோடு வெட்டித்தள்ளும் கோடாலி ஆகும்.**

சில ஆன்மீகவாதிகளின் பலப்பல சித்தத் தத்துவ நூல்களைப் படித்தும் மற்றும் பக்திநூல்களைப் படித்தும், இதில் என்ன சொல்லியுள்ளது. அதில் என்ன சொல்லியுள்ளது என்று ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார்கள். பூஜை செய்ய மாட்டார்கள். அவர்களுக்கும் முதுமை வந்துவிடும், அவர்களுடைய ஆராய்ச்சிகளுக்கும் முதுமை வந்துவிடும். ஆகவே, எந்த ஆன்மலாபமும் பெறமுடியாமல் வீணாகி விடுவார்கள். மேற்கண்ட நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லி பூஜைசெய்து வந்தால் எந்த நூலையும் படிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆராய்ச்சியும் அவசியம் இல்லை.

பல சாஸ்திர நூல்களையும், தோத்திர நூல்களையும் படித்து, பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார்கள். இவர்கள் ஒரு எல்லைக்குட்பட்டே இருந்துவிடுவார்கள். சலிப்பில்லாமல் தினமும் ஞானியர்களைப் பூஜைசெய்து வருபவர்கள் எல்லையில்லாப் பேரானந்தம் பெற்று, பெருவாழ்வு வாழ்வார்கள்.

## பெண்கள் நெற்றியில் பொட்டு (திலகம்) வைக்கும்பொழுது என்ன சொல்ல வேண்டும்?

பெண்கள் நெற்றியில் பொட்டு வைக்கும்பொழுது **ஓம் திருமூலதேவாய நம , ஓம் காலாங்கிதேவாய நம, ஓம் போகதேவாய நம, ஓம் கருவூர்தேவாய நம** என்று சொல்லி நெற்றியில் பொட்டு வைக்க வேண்டும். இவ்வாறு காலையும், மாலையும் நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லிவிட்டு நெற்றியில் பொட்டு வைத்தால், உடல் ஆரோக்கியம் உண்டாகும், திருமணம் தடைபட்டவர்களுக்கு திருமணம் நடக்கும், பண்புள்ள புத்திரபாக்கியம் அமையும், தகுதியுள்ள கணவன் அமைவான், இனம் புரியாத கவலைகள் நீங்கும், தன்னம்பிக்கைள உண்டாகும், எந்தத் துன்பத்தைக் கண்டும் சோர்வடையமாட்டார்கள், எதையும் தாங்கிக்கொள்ளும் மனஉறுதி ஏற்படும், உதிரப்போக்கு, வெள்ளைப்படுதல், மலச்சிக்கல் நீங்கும், வீண் ஆடம்பரத்தில் நாட்டம் கொள்ளமாட்டார்கள். மற்றவர்கள் பிரச்சினையில் கவனம் செலுத்தமாட்டார்கள். தாம் உண்டு தம் வேலைஉண்டு என்று தம் கடமையைச் செய்வார்கள், இன்னும் அநேக நற்குணங்களும் அமையும். மேலும், ஞாமும் சித்திக்கும்.

**ஞானியர்களின் திருவடியைப் பூஜிப்போம்,**
**ஞானம்பெற்று இன்புற்று வாழ்வோம்.**

பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

துறையூர் அவல்பட்டறை தெருவில், சித்தவைத்திய மேதையும், சித்த தத்துவமேதையுமான சின்னசாமி சாஸ்திரி அவர்கள் அன்பர்கள் மத்தியில் உபதேசித்த கருத்துக்கள்

எல்லாம் வல்ல இயற்கைக் கடவுள், மனிதர்களை தோற்றுவிக்கும்பொழுது சத்தும் அசத்தும் சேர்த்தே தோற்றுவிக்கிறார். பக்குவப்பட்ட மனிதன் அசத்தை நீக்கி (மும்மலத்தை நீக்கி) சத்தை நிலைநிறுத்திக்கொள்கிறான். சத்தை நிலைநிறுத்திக் கொண்டவர்கள் எக்காலத்திலும் அழியமாட்டார்கள்.

சத்து என்பது உண்மை, மெய்மை, தூய்மை, வாய்மை, சத்தியம் அல்லது கடவுள் எனப்படும். இதை அறிந்தவர்கள்தான் ஞானிகள் ஆவார்கள்.

ஞானிகளின் நாமத்தை தினமும் சொல்லிவந்தால் அசத்தை (மும்மலத்தை) நீக்கி சத்தை நிலைநிறுத்திக்கொள்ளலாம். அதுவே மனிதர்களும் உண்மை ஆன்மீகமாகும்.

இதை அறியாது, பல்வேறு சடங்குகள் செய்தும், பல புனித தீர்த்தமாடியும் உண்மை ஆன்மலாபம் பெறமுடியாது போகிறார்கள். எனவே,

ஓம் அகத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர் தேவர் திருவடிகள் போற்றி
ஓம் அருணகிரிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி
ஓம் புஜண்ட மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டமுனிவர் திருவடிகள் போற்றி

ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகள் போற்றி
ஓம் இராமலிங்க சுவாமிகள் திருவடிகள் போற்றி

மேற்கண்ட 18 சித்தர்களும் முதுபெரும் ஞானிகளாவார்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தால், சத்து அசத்தைப்பற்றி உணர முடியும். அசத்தை அவர்கள் துணைகொண்டு நீக்கி. சத்தை நிலைநிறுத்திக்கொள்ளலாம். ஆன்மலாபம் பெற விரும்புகிறவர்களுக்கு இதுவே ஒரு வரப்பிரசாதம் ஆகும். மேலும் தினமும் நாமஜெபம் செய்து வந்தால் நாம் பல ஜென்மங்களில் அறியாமையால் செய்த பாவங்கள் நீங்கி, உண்மைப்பொருளாகிய சத்தை அறியலாம். சத்தே – சித்து, ஆனந்தமாகும்.

**குறிப்பு**

பல நூல்களைப்படித்து, ஆண்டுக்கணக்காக ஆராய்ச்சி செய்து, காலத்தை வீணாக்குவதைவிட, **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்வதுவே வீடுபேற்றை தரும்.

**ஞானிகளைப் போற்றுவோம், மரணமிலாப் பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

திருக்குறள் கடவுளால் செய்யப்பட்டது. திருக்குறளைப் பார்ப்பதும், திருக்குறளைத் தொடுவதும், திருக்குறளைப் படிப்பதும், திருக்குறளைப் படிக்கக் கேட்பதும், திருக்குறளைப் பேசுவதும், திருக்குறளை பிறர் பேச கேட்பதும், திருக்குறளைப் பரப்புவதும் அனைத்தும் புண்ணிய செயல்களாகும்.

திருக்குறளைத் தொடுவோம், படிப்போம், பூஜிப்போம், புகழ்வோம், வான்புகழ் வள்ளுவனைப் போற்றுவோம், அவர் ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.

பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!

# ஏழைகளுக்கு பசியாற்றுவிப்பதால் ஏற்படுகின்ற நன்மைகள்

**நாம் புண்ணியவான் ஆவதற்கு, ஆசான் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருள் வாக்கு :**

- தங்கள் தங்கள் தரத்திற்கு தக்கபடி பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதை விரதமாக அனுசரிப்பவர்களுக்கு சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகள் நீங்கி விஷேச சௌக்கியம் உண்டாகும்.
- நல்ல அறிவுள்ள குழந்தைகள் பிறக்கும். தீர்க்க ஆயுளை உண்டு பண்ணும் என்பது உண்மை. மேலும் கல்வி, அறிவு, செல்வம், குடும்பத்தில் மகிழ்ச்சி முதலியவைகள் உண்டாகும்.
- கோடையில் வெயிலும் வருத்தாது. மண்ணும் சூடு செய்யாது. பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலியவைகளால் துன்பம் வராது.
- அம்மை, விஷசுரம், நோய்களை உண்டுபண்ணுகின்ற விஷக்காற்று முதலியவைகளால் கொடியநோய் உண்டாகாது.
- ஆற்று வெள்ளத்தாலும், திருடர்களாலும், பகைவர்களாலும் இடையூறு வராது.
- பொய் வழக்குகளாலும், துஷ்ட தேவதைகளாலும், துன்பம் வராது. நாம் செய்யும் விவசாயத்தில் நல்ல மகசூல் உண்டாகும்.
- வியாபாரத்தில் லாபமும், உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்.

* நல்ல பண்புள்ள நண்பர்களும், ஒத்தக் கருத்துள்ள உறவினர்களும், தகுதியுள்ள வேலையாட்களும் அமைந்து வாழ்க்கையில் அமைதி ஏற்படும்.
* புலி, சிங்கம், கரடி போன்ற கொடிய மிருகங்களாலும், விஷஜந்துக்களாலும் மற்றும் சிறுதெய்வங்களாலும் அச்சமிலா வாழ்வு அமையும்.
* பிறர் பசி தீர்க்ககூடிய எண்ணம் உள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட விபத்துக்களும், இடையூறுகளும் சத்தியமாக வராது என்பது உண்மையாகும்.
* முன்செய்த தீவினையின் காரணமாக நமக்கு துன்பம் வரநேர்ந்தாலும் அத்துன்பம் நீங்கும்.